28th March 1964] *[திரு. எம். பக்தவத்சலம்]*

எடுத்துக்கொள்வதற்கில்லை. வேறு விதத்தில் வேண்டுமானால் விசாரணை நடத்தலாமேயொழிய, கமிட்டி ஆஃப் ப்ரிவிலேஜஸுக்கு விட்டு அல்ல, என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களே சம்பந்தப்பட்ட உறுப்பினரையும், அதிகாரியையும், கனம் உறுப்பினர் முத்தையா அவர்களையும், இந்த மூவரையும் வரவழைத்து விசாரணை செய்து நல்லதொரு தீர்ப்பு வழங்க முயற்சிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு செய்யத் தயாராக இருக்கிறேன். கனம் எதிர் கட்சித் தலைவர் கூறுகிற யோசனையை ஏற்றுக்கொண்டு நான் அவ்வாறு செய்ய ஆட்சேபணை இல்லை.

(Some hon. Members belonging to D.M.K. were talking to each other).

MR. SPEAKER : Hon. Members should not make any allegations here that Sri Muthiah is a Congress Member and that he will not speak the truth. That itself would constitute a breach of privilege . The hon. Members should not speak here in that manner.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காங்கிரஸோ, எதிர் கட்சியோ யாராக இருந்தாலும் அவர் அங்கத்தினர் கூறிய சாட்சிதான்.

கனம் சபாநாயகர் : காங்கிரஸோ, அப்போஸிஷனோ, எதைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்கள் கண்ணோடும் காதோடும் இருந்திருப்பார்களே. கனம் முதல் அமைச்சர் விசாரித்துச் செய்கிறேன் என்று சொல்லுவதைப் பொறுத்து இதை நான் ஒத்தி வைக்கிறேன்.

திரு. எம். எஸ். மணி : இரண்டு முத்தையா இருக்கிறார்கள். இது எந்த முத்தையா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : அதைப் பற்றிப் பின்னால் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

III. ANNOUNCEMENTS.

(1) NOMINATION TO BUSINESS ADVISORY COMMITTEE.

MR. SPEAKER : Under Rule 193 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following Members to be Members of the Business Advisory Committee :— 9–3 a.m

1. Sri K. Parthasarathy (Deputy Speaker).
2. The Hon. Sri M. Bhaktavatsalam (Leader of the House)
3. The Hon. Sri V. Ramaiah.
4. The Hon. Sri P. Kakkan.
5. Sri P. Ramachandran (Government Whip).
6. Sri V. R. Nedunchezhiyan.
7. Sri Saw. Ganesan.
8. Sri M. Kalyanasundaram.
9. Sri K. R. Nallasivam.
10. Sri T. P. Elumalai.

The Speaker is the ex-officio Chairman of the Committee.